டாக்டர் சஞ்சீவ ரெட்டி, டாக்டர் கண்ணகி, மருத்துவ இயக்குனர் டாக்டர் முருகன், டீன் குமரன் உள்ளிட்டோர்.

# பறவையை உண்ணும் சிலந்தி!

**ஊட்டி, ஏப். 7-**

நீலகிரி மாவட்டம், மசினகுடி குடியிருப்புப் பகுதியில், முதன் முறையாக தென்பட்ட 'பறவை உண்ணும் சிலந்தி' குறித்த ஆய்வில், ஊட்டி அரசு கலைக் கல்லூரி விலங்கியல் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியாவில் பல வகை சிலந்திகள் உள்ளன. இதில், 'போசில்லோதெர்யா ரெகைல்ஸ்' என்ற விலங்கியல் பெயரை கொண்ட, கொடிய விஷத் தன்மை நிறைந்த இச்சிலந்திகள், கேரளா மாநிலத்தில் பாலக்காடு உட்பட இடங்களில் அதிகளவில் காணப்படுகின்றன. இவ்வகை சிலந்திகள், மரத்தில் வாழும்.

விஷத்தன்மை நிறைந்த இச்சிலந்திகள், சிறிய பறவை, பூச்சியினங்களை உண்டு, உயிர் வாழ்கின்றன. இச்சிலந்தியால் கடிபடும், ஆடு, மாடுகள் கூட கடிபட்ட இரண்டு மணி நேரத்தில் இறந்து விடும், என கூறப்படுகிறது.

நீலகிரி மாவட்டம் மசினகுடி மாவனல்லா பகுதியில் வசிக்கும், ஊட்டி அரசுக் கலைக் கல்லூரியில் விலங்கியல் துறையில், ஆராய்ச்சிப் படிப்பு படிக்கும் பத்மாவதி என்ற மாணவியின், வீட்டில் இருந்த விறகு கட்டின் இடையே, இவ்வகை சிலந்தி இறந்த நிலையில் இருப்பது தெரியவந்தது. அச்சிலந்தியை, மாணவி பத்மாவதி, கல்லூரிக்கு எடுத்து வந்தார். சிலந்தியின் உடல் பகுதி மட்டும், 6.5 செ.மீட்டர் நீளம் கொண்டுள்ளது. கல்லூரி விலங்கியல் மற்றும் வன உயிரியல் துறை தலைவர் டாக்டர் எபினேசர் மற்றும் ஆராய்ச்சி மாணவ, மாணவியர், இந்த சிலந்திகள் குறித்த தகவலை சேகரித்து, அதை பதிவு செய்யும் ஆராய்ச்சி பணியில் ஈடுபட்டுள்ளனர்.



நீலகிரி மாவட்டம் மசினகுடி அருகே மாவனல்லா பகுதியில் காணப்பட்ட பறவைகளை உண்ணும் விஷ சிலந்தி.